<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6</u>

<u>மேல்நிலை முதலாம் ஆண்டு (பழைய பாடத்திட்டம்) மற்றும் இரண்டாம் ஆண்டு சிறப்புத் துணைத் தேர்வு ஜூன் 2019</u>

<u>தனித்தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல் தொடர்பான செய்திக் குறிப்பு</u>

நடைபெற்ற மார்ச் 2019 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாதவர்கள், வருகை புரியாதவர்கள் மற்றும் 2018 மார்ச் / ஜுன் பருவத்தேர்வுகளில் மேல்நிலை முதலாம் ஆண்டு வருகை புரியாத, தேர்வெழுதி தேர்ச்சிப் பெறாத பாடங்களை (+1 arrear subjects), மார்ச் 2019 பருவத்தில் தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்கள் / தேர்விற்கு வருகை புரியாதவர்கள் ஆகியோர் நடைபெறவிருக்கும் ஜூன் 2019 மேல்நிலை இரண்டாம் ஆண்டு / முதலாம் ஆண்டு (பழைய பாடத்திட்டம்) சிறப்புத் துணைத் தேர்வெழுத விண்ணப்பிக்கலாம்.

மேற்குறிப்பிட்ட தேர்வர்களுள், ஜூன் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு (பழைய பாடத்திட்டம்) / இரண்டாம் ஆண்டு சிறப்புத் துணை தேர்வெழுத விண்ணப்பிக்க விரும்பும் பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளியின் வாயிலாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் வாயிலாகவும் மட்டுமே ஆன்–லைனில் விண்ணப்பிக்க இயலும். விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் பள்ளிகள் / தேர்வு மையங்களுக்கு நேரில் சென்று **<u>03.05.2019 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் முதல் 08.05.2019 (புதன்கிழமை) பிற்பகல் 5.45 மணி வரை</u>** ஆன்–லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

- **தனியார் Browsing Centre-கள் மூலம் விண்ணப்பிக்க இயலாது.**

**<u>குறிப்பு:-</u>**

1. **மேல்நிலை முதலாமாண்டு (+1) பொதுத்தேர்வினை பழைய பாடத்திட்டத்தில் (Old Syllabus) தேர்வெழுதி தேர்ச்சி பெறாதோர் மற்றும் வருகை புரியாதோர், வருகை புரியாத / தேர்ச்சி பெறாத பாடங்களில் பழைய பாடத்திட்டத்தில் (Old Syllabus) தேர்வு எழுத ஜுன் 2019 சிறப்புத் துணைத்தேர்வே இறுதி வாய்ப்பாகும்.**

2. **மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத்தேர்வினை பழையப் பாடத்திட்டத்தில் (Old Syllabus) தேர்வு எழுதவும், பழைய நடைமுறையின்படி (Old Pattern) (மொத்தம் 1200 மதிப்பெண்களுக்கு) தேர்வெழுதவும் ஜூன் 2019 பருவம் மட்டுமே இறுதி வாய்ப்பாகும்.**

3. **மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத்தேர்வினை புதிய நடைமுறையின்படி (மொத்தம் 600 மதிப்பெண்களுக்கு) தேர்வு எழுதிய தேர்வர்களுக்கு பழைய பாடத்திட்டத்தில் (Old Syllabus) தேர்வெழுத ஜூன் 2019 பருவம் மட்டுமே இறுதி வாய்ப்பாகும்.**

4. **புதிய பாடத்திட்டத்தில் முதன்முறையாக மார்ச் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வெழுதிய பள்ளி மாணவர்கள் / தனித்தேர்வர்களுக்கு தேர்வு முடிவுகள் வெளியிட்ட பின்னர், தேர்ச்சிப் பெறாத / வருகை புரியாத பாடங்களில் ஜூன் 2019 மேல்நிலை முதலாம் ஆண்டு சிறப்பு துணைத் தேர்வின் போது தேர்வெழுதுவதற்கு விண்ணப்பிக்க தேதி பின்னர் அறிவிக்கப்படும்.**

..2..

ஜூன் 2019 மேல்நிலை இரண்டாம் ஆண்டு சிறப்பு துணைத் தேர்வு 06.06.2019 முதல் 13.06.2019 வரையிலான நாட்களிலும், மேல்நிலை முதலாம் ஆண்டு (பழைய மற்றும் புதிய பாடத்திட்டம்) சிறப்பு துணைத் தேர்வு 14.06.2019 முதல் 21.06.2019 வரையிலான நாட்களிலும் நடைபெறும். ஜூன் 2019 இடைநிலை / மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு சிறப்பு துணைத்தேர்வுகளுக்கான கால அட்டவணையினை www.dge.tn.gov.in என்ற இணைய தளத்தில் காணலாம்.

**மேல்நிலை முதலாம் ஆண்டு (பழைய பாடத்திட்டம்) / இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வில் செய்முறைத் தேர்வு உள்ள பாடங்களில் தேர்ச்சி பெறாதோருக்கான குறிப்பு (600 மதிப்பெண்கள் – New Pattern)**

1. செய்முறைத் தேர்வில் பங்கேற்காமல் (வருகை புரியாதோர்), எழுத்துத் தேர்வில் மட்டும் பங்கேற்று, எழுத்துத் தேர்வு மற்றும் அகமதிப்பீட்டில் மொத்தம் 35 மற்றும் அதற்கும் மேல் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறாத தேர்வர்கள், உடனடி சிறப்புத் துணைத் தேர்வின்போது **செய்முறைத் தேர்வில் மட்டும் பங்கேற்றால் போதுமானது**. அத்தேர்வர்கள் எழுத்துத் தேர்வினை மீண்டும் எழுத இயலாது.

2. செய்முறைத் தேர்வில் பங்கேற்காமல் (வருகை புரியாதோர்), எழுத்துத் தேர்வில் மட்டும் பங்கேற்று, எழுத்துத் தேர்வு மற்றும் அக மதிப்பீட்டில் மொத்தம் 35 மதிப்பெண்களுக்கும் குறைவான மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறாத தேர்வர்கள், உடனடி சிறப்புத் துணைத் தேர்வின் போது எழுத்துத் தேர்வு மற்றும் செய்முறைத் தேர்வு ஆகிய இரண்டிலும் பங்கேற்க வேண்டும்.

3. செய்முறை மற்றும் எழுத்துத் தேர்வுகளில் பங்கேற்று தேர்ச்சி பெறாத தேர்வர்கள், எழுத்துத் தேர்வினை மட்டும் எழுதினால் போதுமானது. அத்தேர்வர்கள் மீண்டும் செய்முறைத் தேர்வு செய்ய வேண்டியதில்லை.

**தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை:**

தனித்தேர்வர்கள் ஒரு பாடத்திற்கு ரூ.50 + (இதர கட்டணம் ரூ.35/– ) மற்றும் ஆன்லைன் பதிவுக்கட்டணம் ரூ.50/- சேர்த்து பணமாக மட்டுமே செலுத்த வேண்டும்.

**தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகளை பதிவிறக்கம் செய்தல்**

தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகளை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டிய நாட்கள் குறித்தான விவரம் பின்னர் அறிவிக்கப்படும். தேர்வர் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தேர்வு மையம் குறித்து தேர்வுக்கூட அனுமதிச்சீட்டில் அறிந்து கொள்ளலாம்.

தேர்வர்களுக்குத் தேர்வெழுத தற்போது வழங்கப்படும் அனுமதி முற்றிலும் தற்காலிகமானது எனவும், தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்ட பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

ஒம்/–
**இயக்குநர்**

**இடம் :** சென்னை – 600 006
**நாள் :** 29.04.2019